# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 | தை 09 | புதன்கிழமை | 22.01.2025 | கதிர் 104







# வடக்கின் அபிவிருத்தி தொடர்பில் அதிக கவனம்



## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 22

வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் உலக வங்கி பிரதிநிதிகளுக்கும் இடையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே மேற்கண்டவாறு ஜனாதிபதியால் கூறப்பட்டுள்ளது.

விமான நிலையம் மற்றும் துறைமுக அபிவிருத்திக்கான புதிய திட்டங்கள் செயற்படுத்தப்படும் என்றும், துறைமுக அபிவிருத்தியை துரிதமாக மேற்கொள்ள இருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்களை நிறுவ நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

வடக்கில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தவும், நீர் வசதிகளை வழங்கவும், வடக்கு மக்களின் சமூகப் பிரச்சினைகளுக்கு கலாசார அடையாளத்தைப் பாது காக்கும் வகையில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

# மஹிந்தவே மக்களின் தலைவர்



## அவர் தோற்கடிக்கப்படவில்லை என்று ஜோன்ஸ்டன் கூறுகின்றார்



கொழும்பு ,ஜன 22

"மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப்படவில்லை. அவரே என்றைக்கும் நாட்டு மக்களின் தலைவராக இருக்கின்றார். அவரை மக்களே பாதுகாப் பார்கள்." – என்று முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். 7▶

# யாழில் நிமோனியாக் காய்ச்சலால் நான்கு வயது சிறுமி பரிதாபப் பலி



யாழ்ப்பாணம், ஜன. 22

நிமோனியா காய்ச்சல் காரணமாக 4 வயது சிறுமி உயிரிழந்த சம்பவம் யாழ்ப்பாணத்தில் பதிவாகியுள்ளது.

புங்குடுதீவு, 6ஆம்வட்டாரத்தைச் சேர்ந்த 7▶

## தென்னிலங்கையில் நேற்று இரவு

# தூக்கில் தொங்கிய நிலையில் தமிழ் மாணவன் சடலமாக மீட்பு



கொழும்பு, ஜன. 22

கொழும்பு மாவட்டம், கெஸ்பவை பிரதேசத்தில் தமிழ் மாணவன் ஒருவர் வீட்டிலிருந்து சடலமாக மீடகப்பட்டுள்ளார்.

கொழும்பு நகர் பாடசாலையொன்றில் உயர்தரத்தில் கணிதப் பிரிவில் 7▶

# அரசியல் கைதிகளை அரசு விடுவிக்க எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை



## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 22

அரசியல் கைதிகளை தேசிய மக்கள் சக்தி அரசு விடுதலை செய்ய எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. 7▶

# வெள்ளவத்தையில் பெண் ஒருவர் கடத்தல்: முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் கைது!

கொழும்பு, ஜன. 22

கொழும்பு, வெள்ளவத்தைப் பகுதியில் பெண் ஒருவர் கடத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த 18 ஆம் திகதி திகதி வெள்ளவத்தையில் உள்ள தனியார் வைத்தியசாலை விடுதிக்கு வெளியே பெண் ஒருவர் வான் ஒன்றில் 7▶



- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# அரச குடியிருப்புகளின் பெறுமதியை வெளிப்படுத்தினார் அநுர

கொழும்பு, ஜன 22

வரி செலுத்துவோர் மீதான நிதிச் சுமை குறித்த பொது விவாதத்தின் மூலம், முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஆடம்பர வீடுகளை வழங்குவதற்கு அரசினால் மேற்கொள்ளப்பட்ட கணிசமான செலவுகள் குறித்து ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க வெளிச்சம் போட்டு காட்டியுள்ளார்.

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போது பேசிய ஜனாதிபதி திஸாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மாதம் 2 மில்லியன் பெறுமதியான அரசாங்கத்திற்கு சொந்தமான ஒரு வீட்டில் வசிப்பதாக தெரிவித்தார். அதேபோன்று, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் மாதாந்தம் ரூ. 0.9 மில்லியன் பெறுமதியான வீட்டில் இருப்பதாக கூறினார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வீடு தொடர்பான முன்னைய கருத்துக்களையும் மீண்டும் வலியுறுத்திய ஜனாதிபதி, அதன் பெறுமதி மாதத்திற்கு ரூ. 4.6 மில்லியன் எனவும் மற்றும் ஒரு ஏக்கருக்கும் அதிகமான இடம் எனவும் கூறினார்.



எவ்வாறாயினும், சில முன்னாள் தலைவர்கள் அத்தகைய சலுகைகளை விட்டுக்கொடுத்த நடவடிக்கைகளை அவர் ஒப்புக்கொண்டார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்க வீடொன்றை ஏற்றுக்கொள்ளாததற்கு நன்றி தெரிவித்த ஜனாதிபதி திஸாநாயக்க, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் தனது அரச இல்லத்தை கையளித்ததையும் குறிப்பிட்டார். முன்னாள் முதல் பெண்மணி ஹேமா பிரேமதாசவும் சில காலங்களுக்கு முன்னர் தனது உத்தியோகபூர்வ இல்லத்தை கையளித்ததாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அரசாங்கம் வழங்கிய வீடுகள் திரும்பப் பெறப்படுமா என்ற கேள்விகளுக்கு பதிலளித்த ஜனாதிபதி திஸாநாயக்க, அரசியல் பிரமுகர்களுக்கான தேவையற்ற செலவினங்களைக் குறைப்பதற்கான தனது நிர்வாகத்தின் அர்ப்பணிப்பை வலியுறுத்தினார்.

தனக்குக் கிடைத்த பொது ஆணை, அத்தகைய சலுகைகளை மட்டுப்படுத்தவும் வளங்களை தேசத்தின் வளர்ச்சிக்கு திருப்பிவிடவும் அழைப்பு விடுப்பதாக அவர் கூறினார். (ஐ)

# மோசடியில் ஈடுபட்டவர் கட்டுநாயக்கவில் கைது



கொழும்பு, ஜன 22

பேஸ்புக் கணக்கொன்றினுள் பிரவேசித்து உறவினரைப் போல ஆள்மாறாட்டம் செய்து நிதிமோசடியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் நேற்று இலங்கை வந்தபோது, கொழும்பு குற்றப்பிரிவின் அதிகாரிகள் குழுவினால் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்.

இந்த சந்தேக நபர் உறவினர் போல் தன்னை காட்டிக் கொண்டு மோசடியாக பேஸ்புக் கணக்கின் ஊடாக, மூன்று சந்தர்ப்பங்களில் வங்கிக் கணக்கு ஒன்றிலிருந்து 700,000 ரூபாயை வைப்பிலிடச் செய்திருப்பது தெரியவந்துள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக கடந்த 2024 ஆம் ஆண்டு ஓகஸ்ட் 22 ஆம் திகதியன்று கொழும்பு குற்றப்பிரிவுக்கு முறைப்பாடு கிடைத்தது. அதன் பின்னர் சம்பந்தப்பட்ட கணக்குகளை தணிக்கை செய்தபோது சந்தேக நபரை பொலிஸார் அடையாளம் கண்டனர்.

சந்தேக நபர் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட தகவல்களின்படி, அவர் கட்டாரில் இருந்து வந்துள்ளமை தெரியவந்துள்ளது. சந்தேக நபருக்கு எதிராக குடிவரவுத் தடை பெறப்பட்டதுடன், நேற்று அவர் நாட்டிற்கு வந்தவுடன், கொழும்பு குற்றப்பிரிவின் அதிகாரிகள் குழுவினால் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மொன்னேகுளம பகுதியைச் சேர்ந்த 28 வயதுடையவர் என தெரியவந்துள்ளது. (ஐ)

# பனிமூட்டமான நிலை சாரதிகளுக்கு எச்சரிக்கை



கொழும்பு, ஜன 22

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் காலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால் சாரதிகள் அவதானத்துடன் வாகனங்களை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

(ஐ)

# குற்றச்செயல்கள்: படையினர் பலர் கைது



கொழும்பு, ஜன 22

நாட்டில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் பாதுகாப்பு தரப்பை சேர்ந்த பலர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கைது செய்யபடுள்ளவர்களில் இராணுவ மேஜர் ஒருவர், ஏனைய தரங்களில் உள்ள 6 அதிகாரிகள், ஒரு பொலிஸ் அதிகாரி மற்றும் ஒரு சிவில் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் உள்ளடங்குவதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்கிழமை நடைபெற்ற கிளீன் ஸ்ரீலங்கா திட்டம் தொடர்பான விவாதத்தின் போதே அவர் இதனை கூறினார்.

கடந்த செப்டம்பர் 23ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் இடம்பெற்ற குற்றச்செயல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தினால் இராணுவத்தை சேர்ந்த ஒருவர், இருவர் இதில் தொடர்புப்பட்டுள்ளனர். இந்த தினங்களில் இராணுவ மேஜர் ஒருவர், ஏனைய தரங்களில் உள்ள 6 அதிகாரிகள், ஒரு பொலிஸ் அதிகாரி மற்றும் ஒரு சிவில் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, திட்டமிட்ட குற்றகும்பலை சேர்ந்த 15 பேரும், அவர்களுக்கு உதவிய 15 பேரும் கைதாகியுள்ளனர்.

அத்துடன் இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர் வு56 துப்பாக்கிகள் -7, பிஸ்டல் ரக துப்பாக்கிகள் 10, ரிவால்வர்கள் 14,

வெடிமருந்துகள் பயன்படுத்தும் துப்பாக்கிகள் 461, போர் 12 ரக துப்பாக்கிகள் 58 என்பன கைபற்றப்பட்டுள்ளன.

அத்துடன், இந்த 2 மாதங்களுக்குள் 354 கிலோகிராம் ஹெராயின், 3,847 கிலோகிராம் கேரள கஞ்சா, 3.8 கிலோகிராம் கொக்கெய்ன், 181.9 கிலோகிராம் ஹாஷிஷ் மற்றும் 759 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் ஆகியவையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை நிதி குற்றப் பிரிவு அடுத்த வாரம் மீண்டும் நிறுவப்படும் அதன்படி, குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் உள்ள 29,000 கோப்புகளில் இருந்து நிதிக் குற்றக் கோப்புகளை அந்தப் பிரிவுக்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (ஐ)

# தேங்காய்க்குத் தீர்வு



கொழும்பு, ஜன 22

வடக்கு தென்னை முக்கோண வலயத்தில் 40,000 ஹெக்டயர் தென்னை மர பயிர்செய்கைக்காக 2025 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அரசாங்கம் 1,437 மில்லியன் ரூபாய் ஒதுக்கியுள்ளதாக பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன இன்று (21) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் 5 ஹெக்டயருக்கும் குறைவான தென்னை தோட்டங்களுக்கு இலவச உரம் வழங்கவும் அரசாங்கம் முடிவு செய்துள்ள தெரிவித்தார்.

ரஷ்யாவிலிருந்து பெறப்பட்ட 55,000 மெட்ரிக் தொன் உரத்தில் 27,500 மெட்ரிக் தொன் உரத்தை தேங்காய் பயிர்செய்கைக்காக ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# கிழக்கு பல்கலைக்கழகத்துக்கு பதில் துணைவேந்தர் நியமனம்

மட்டக்களப்பு , ஜன 22

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்கு பல்கலைக் கழகத்தின் பதில் துணைவேந்தராகக் கலாநிதி த.பிரபாகரன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவரது நியமனத்துடன் இலங்கையில் பதில் துணைவேந்தர்களுடன் இயங்கும் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

கிழக்கு பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வ. கனகசிங்கத்தின் பதவிக் காலம் நேற்று ஜனவரி 21 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிலையில், துணைவேந்தரின் கடமைகளை ஆற்றுவதற்கு பதில் பிரதித் துணைவேந்தர் கலாநிதி தம்பிராஜா பிரபாகரன் நியமிக்கப்பட்டுள்ளார்.

துணைவேந்தர் பதவிக்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் கடந்த வருடம் ஒக்ரோபர் 15 ஆம் திகதி புள்ளிகளை வழங்கினர். அவற்றின் அடிப்படையில், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் முதல் நிலையிலும், சுகநல விஞ்ஞானங்கள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தில்லைநாதன் சதானந்தன், விஞ்ஞான பீடத்தின் பௌதிகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் பரராஜசிங்கம் பிரதீபன் ஆகியோர் முறையே இரண்டாம், மூன்றாம் இடங்களையும் பெற்றிருந்தனர்.

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின் படி, புள்ளிகளின் அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்கள் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைகைகப்படும். பல்கலைக் கழகச் சட்டத்தின் படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரைத் துணைவேந்தராக ஜனாதி பதி தெரிவு செய்து, நியமனம் செய்வது வழமையாக இருந்து வந்தது.

எனினும், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயகா பதவிக்கு வந்த பின்னர், ஜனாதிபதியினால் பல்கலைக் கழகங்களுக்குத் துணைவேந்தர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. துணைவேந்தர்களின் பதவிக்காலம் முடிவுற்ற பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவே பதில் துணைவேந்தர்களை நியமித்துள்ளது.

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் திருமதி ஜீ.ஏ.எஸ். ஹினிகதரவின் பதவிக்காலம் கடந்த மாதத்துடன் நிறைவடைந்துள்ள நிலையில், கலாநிதி ஜானக புஸ்பகுமார பதில் துணைவேந்தராகக் கடமையாற்றி வருகிறார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஏ.ரமீஸின் பதவிக்காலம் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நிறைவடைந்துள்ள நிலையில் கலாநிதி ஜானக புஸ்பகுமார பதில் துணைவேந்தராகக் கடமையாற்றி வருகிறார்.

ரு/ஹுண பல்கலைக்கழகத்தில் இயல்புநிலை பாதிப்புக்குள்ளாகியதை அடுத்து, பல்கலைக்கழகச் சட்டத்தின் படி கல்வி அமைச்சருக்குள்ள தத்துவத்தின் அடிப்படையில், முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேனவின் பதவி வறிதாக்கப்பட்டு அவரது கடமைகளை ஆற்றுவதற்கெனத் தகுதி வாய்ந்த அதிகாரியாக ஆர்.எம்.யூ.எஸ்.கே.ரத்நாயக்க பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரியவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது, கிழக்குப் பல்கலைக் கழகத்தின் பதில் துணைவேந்தராகக் கலாநிதி தம்பிராஜா பிரபாகரன் நியமிக்கப்பட்டுள்ளார். கிழக்குப் பல்கலைக்கழகத்துடன், இலங்கையில் பதில் துணைவேந்தர்களுடன் இயங்கும் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை நான்காக உயர்ந்துள்ளது.

இதே நேரம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வேந்தராக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டிருந்த தகைசார் பேராசிரியர் சி.பத்மநாதனின் பதவிக்காலமும் நிறைவடைந்துள்ள நிலையில் யாழ். பல்கலைக்கழக வேந்தர் நியமனம் குறித்தும் ஜனாதிபதி செயலகத்தினால் எந்தவொரு தகவலும் வெளியிடப்படவில்லை.

இலங்கையிலுள்ள அரச பல்கலைக்கழகங்களுக்குத் துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பில் இதுவரை காலமும் பின்பற்றப்பட்டு வந்த நடைமுறையை மாற்றுவது குறித்து அரச உயர்மட்டத்தில் ஆராயப்படுவதனாலேயே இந்த இழுபறி நிலை காணப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மு.கா. மரத்தில் போட்டி

கொழும்பு, ஜன 22

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மரச் சின்னத்தில் தனித்து போட்டியிடுவதாக, “தாருஸ்ஸலாம்” தலைமையகத்தில் நடைபெற்ற கட்சியின் கொழும்பு மாவட்ட மத்திய குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையில் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர்களான நிசாம் காரியப்பர், எம்.எஸ்.உதுமா லெப்பை, எம்.எஸ்.நழீம் உள்ளிட்ட கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர், மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்படடுள்ளது.

பிரஸ்தாப கொழும்பு மாவட்ட மத்திய குழுக் கூட்டத்தில் தற்போதைய அரசியல் சூழ்நிலையை மையப்படுத்தி நீண்ட நேரமாக கலந்துரையாடப்பட்டதன் பின்னர், கொழும்பு, தெஹிவளை-கல்கிஸ்ஸ, கோட்டே, மொரட்டுவை, கொலன்னாவ மாநகர சபைகளுக்கும், கொட்டிகாவத்தை, முல்லேரியா போன்ற பிரதேச சபைகளுக்கு முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவது என்ற முடிவை மு.கா தலைவர் அறிவித்ததோடு, அடுத்த கட்ட நடவடிக்கைகளை கட்சி உடனடியாக ஆரம்பிக்க உள்ளதாகவும் தெரிவித்தார். (ஐ)



# மிதி வெடி

“இடம் கொடுத்தால் மடம் கட்டுவான்” எண்டு ஒரு விடுமொழி இருக்குது தெரியுமே?

அதான் பாருங்கோ... பாவம் பழிக்கு அஞ்சி ஒதுங்க இடம் குடுத்தால், ஒட்டுமொத்த இடத்துக்கும் ஆட்சி உரிமை கொண்டாடுவாங்களாம்...

உது தான் உங்க நடக்குது பாருங்கோ...

உங்களுக்குச் சொந்தமான சொத்து ஒண்டைத் தானே நீங்கள் மற்றவைக்கு வாடகைக்கு விடலாம்..?

இது உங்களுக்குச் சொந்தமே இல்லலாத இடத்தில “ஒண்டிப் பிழைக்க” விட்டதுக்காக, இப்ப சண்டித்தனம் காட்ட ஏலுமே..?

நகர மத்தியில உது தான் நடக்குதாம் பாருங்கோ...

இலங்கை போக்குவரத்து சபை “பஸ்” வண்டிகளை நிப்பாட்டி எடுக்கிறதுக்கு வசதியா அரசாங்க நிலத்தில குடுத்த இடத்தை வச்சு இப்ப “பிஸினஸ்” செய்யினமாம்... குப்பையும், கூழுமுமா... வெத்திலைத் துப்பலும், மல - சல வாடையுமா இருக்கிற இடத்துக்குச் செந்தம் கொண்டாடுறவை, தங்கட வரையறைக்குள்ள நிண்டு செய்ய முடியாததுகளைத் தூண்டி விட்டுச் சாதிக்கப் பாக்கினம்......

யாழ். நகரத்துக்கு மத்தியில இருக்கிற “பஸ்” நிலையம் இண்டைக்கு ஆறேழு தசாப்தங்களுக்கு முன்னர் வாற, போற “பஸ்” வண்டிகளை நிப்பாட்டி, எடுக்குறதுக்காகத் தான் குடுக்கப்பட்டதாம்... அரசாங்கக் காணியில ஆட்சி அதிகாரம் எதுவுமில்லாமல் பொது மக்களுக்கு வசதி செய்யுறதுக்காகக் குடுக்கப்பட்ட நிலத்தை இண்டைக்குச் சொந்தக்காரர் போல வாடகைக்கு விட்டு கோடிக் கணக்கில சம்பாதிக்கிற இ.போ.ச, அபிவிருத்தி எண்டு வரேக்க அந்த இடத்தை விட்டுப் போகமாட்டம் எண்டு அடம் பிடிக்கிறது மட்டுமில்லாமல், தங்கட “சிற்றாட்சி”க்குள்ள இருக்கிற பழக்கடை வியாபாரிகளை வச்சு அரசியல் பண்ணப் பாக்கினமாம்.

மத்திய பேருந்து நிலையப் பகுதி உண்மையில நகர அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமா? இல்லாட்டி மாநகர சபைக்குச் சொந்தமா எண்டுறது தான் இப்ப பிரச்சினை. எந்தச் சட்டப்படி பார்த்தாலும் இ.போ.ச உதுக்குச் சொந்தம் கொண்டாடவே முடியாதாம்.

நகர்ப்புறம் எண்டு பார்த்தால், நகரத்துக்குள்ள இருக்கிற அரச நிலம் (“ஸ்ரேற் லாண்ட்”) நகர அபிவிருத்தி அதிகார சபையின்ர கட்டுப்பாட்டுக்குள்ள வரலாம், இல்லாட்டி தன்ர நியாயாதிக்க எல்லைக்குள்ள இருக்கிற அரச நிலத்தைக் கட்டி ஆழும் அதிகாரம் உள்ளூர் அதிகார சபையான மாநகர சபைக்கு இருக்கலாம்.

ஆனா.. இங்கை மத்திய பேருந்து நிலையத்தைச் சுத்தி இருக்கிற பழக் கடைகள் அத்தனையும், தங்களுக்குச் சொந்தமெண்டு சொல்லிக் கொண்டு கோடிக் கணக்கில நில வாடகை வேண்டுற இ.போ.ச இப்ப அபிவிருத்தி எண்டு வரேக்க அந்த இடத்தை விட்டுட்டுப் போற பஞ்சியில பாவம் ஒண்டும் தெரியாத பழக்கடைக்காரரரைக் கிண்டிவிட்டிருக்கினமாம்.

அவையளும், தங்கட வாழ்வாதாரம் - அது,இதுவெண்டு கூக்குரல் எழுப்பினம். அவையளுக்கு ஒண்டு மட்டும் விழுங்கேல்ல... “பஸ் ஸ்ராண்ட்” எங்க இருக்குதோ... அங்க அவையளுக்கு வியாபாரம் இருக்கும்...

திட்டமிட்டபடி, இப்ப “பஸ் ஸ்ராண்ட்” இருக்கிற இடத்தில “ஷொப்பிங் பிளக்ஸ்”, “அண்டர்கிரவுண்ட் பார்க்கிங்”, மேல் மாடியில “ஹெலிபாட்” எல்லாம் வந்தால் நகரம் எவ்வளவு அழகா இருக்கும்?

அருகில இருக்கிற ஆசுபத்திரிக்கு வாற அவசர நோயாளியளைக் “ஹெலி”யில கொண்டு போறது, இந்தப் பக்கத்தால “அம்புலன்ஸ்” வந்து போக வாசல் விடுறது வரைக்கும் பக்கவாத் திட்டம் தீட்டி வைச்சிருக்கினம்.

அந்தத் திட்டத்தின் பழக்கடைக்காரருக்கும் இடம் குடுபடும் எண்டு நகர அபிவிருத்தி அதிகார சபையும், மாநகர சபையும் சொல்லித் தான் இருக்கினம்... ஆனா.. உந்த இடத்தை விட்டுப் போனால் தங்களுக்கு வாற “கொழுத்த” வருமானம் இல்லாமல் போயிடும் எண்டதால தான் இவ்வளவும் நடக்குதாம்... “ஒண்ட வந்த பிடாரி, ஊரில இருந்த பிடாரியை ஓட, ஓடக் கலைச்சுதாம்..” எண்டது கணக்கா எல்லே இருக்குது....

பழக் கடைக்காரரும் பாவம் பாருங்கோ... எத்தினையோ குடும்பங்கள் இந்தப் பிழைப்பை நம்பித் தான் குடும்பம் நடத்துகினம் எண்டது உண்மை தான்.

ஆனா இவையைக் காலம் காலமாப் பிழையா வழி நடத்திப் போட்டினம் பாருங்கோ...

மாநகரத்தில ஆட்சிக்கு வாற அத்தனை பேரும் அவையளுக்கு வாக்குறுதியள அள்ளி வீசிப் போட்டுத் தங்கட ஆட்சிக் லம் முடிய ஆளாளுக்கு அள்ளிச் சுருட்டிக் கொண்டு போய்ச் சேர்ந்திடுவினம்...

தியேட்டர் காரர் தான் கன காலமா அவையள வைச்சுப் பிழைப்பு நடத்தினவை.. தமிழரசு ஆட்சிக்கு வந்து அங்கினேக்க கொஞ்சம் செய்ய வெளிக்கிட “தியேட்டர்”கார “மெம்பர்” மார் தான் குழப்பி அடிச்சவையாம்.... அப்ப நகர அபிவிருத்தி அமைச்சரா இருந்த சம்பிக்க ரணவக்க யாழ்ப்பாணம் வந்து நகரக் கட்டடத்துக்கு அடிக்கல்லும் நாட்டிப் போட்டுப் போனவர். அந்த நேரத்தில உந்தப் பழக்கடைக்காரர் எல்லாருக்கும் மிகப் பொருத்தமான தீர்வு குடுக்கிறதா எல்லாரும் ஒத்துக் கொண்டவையாம்... இப்ப குழப்புறதின்ர உள்நோக்கம் உங்களுக்கு விளங்குதே....?

–நரமுனி–

# ஆம் ஆத்மி பிரச்சாரத்தை சீர்குலைக்கும் பா.ஜ.க. திட்டம் - அரவிந்த் கெஜ்ரிவால்!



ஆம் ஆத்மி கட்சியின் நிறுவனரும், டெல்லி முன்னாள் முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் எதிர்வரும் 5-ஆம் திகதி நடைபெற உள்ள டெல்லி சட்டசபை தேர்தலில் ஆம் ஆத்மி கட்சியின் பிரசாராங்களை சீர்குலைத்து, வாக்காளர்களை அச்சுறுத்த பா.ஜ.க. அரசு பொலிஸார் பயன்படுத்தி வருவதாக குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் தொடர்ந்து பேசிய அவர், "டெல்லி பொலிஸார் முழுமையாக பா.ஜ.க.வுடன் தான் இருக்கிறது. மக்களின் பாதுகாப்புக்காக யாரும் இல்லை. எங்களது பிரச்சார கூட்டங்களில் இடையூறை ஏற்படுத்த தங்களுக்கு மத்திய உள்துறை அமைச்சகத்தில் இருந்து நேரடி உத்தரவுகள் வருவதாக பொலிஸாரே கூறுகின்றனர்."

"வாக்காளர்கள் தங்களது வாக்கை செலுத்த விடாமல் தடுக்கப்படுவார்களோ என்ற அச்சம் எனக்கு எழுந்துள்ளது. பொலிஸார் ஆம் ஆத்மியின் தேர்தல் பிரச்சாரம் சார்ந்த முயற்சிகளை தடுக்க நினைக்கும் பா.ஜ.க.வினருக்காக பணியாற்றி வருகிறார்கள்," என்றார்.

வருகிற பெப்ரவரி 5-ஆம் திகதி நடைபெற இருக்கும் டெல்லி சட்டசபை தேர்தலின் முடிவுகள் பிப்ரவரி 8-ஆம் திகதி அறிவிக்கப்பட உள்ளன. இந்த தேர்தலில் வெற்றி பெற்று தொடர்ச்சியாக மூன்றாவது முறை டெல்லியில் ஆட்சியை பிடிக்க ஆம் ஆத்மி கட்சி போட்டியிடுகிறது. கடந்த 2020-ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆம் ஆத்மி கட்சி மொத்தமுள்ள 70 இடங்களில் 62 தொகுதிகளில் வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது

## பாலியல் தொல்லை அளித்த வழக்கில் கைதான தொழிலதிபருக்கு சிறையில் சிறப்பு சலுகை!



பாலியல் தொல்லை அளித்த வழக்கில் கைதான தொழிலதிபருக்கு சிறையில் சிறப்பு சலுகை வழங்கியதாக குற்றம் சாட்டப்பட்டதாகக்கூறி சிறைத்துறை டி.ஐ.ஜி. பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

மலையாள திரையுலகை சேர்ந்த பிரபல நடிகை ஹனிரோசுக்கு பாலியல் தொல்லை கொடுத்த வழக்கில், கேரள மாநிலத்தை சேர்ந்த பிரபல தொழிலதிபரான பாபி செம்மனூரை எர்ணாகுளம் மத்திய பொலிஸார் கடந்த 8-ஆம் திகதி கைது செய்தனர்.

பின்பு அவர் எர்ணாகுளம் காக்கநாட்டில் உள்ள மாவட்ட சிறையில் அடைக்கப்பட்டார். பின்பு சில நாட்களுக்கு பிறகு அவர் சிறையில் இருந்து பிணையில் விடுவிக்கப்பட்டார். இதற்கிடையே பாமி செம்மனூர், சிறையில் இருந்தபோது அவரை சந்திக்க வந்த முக்கிய பிரமுகர்களுடன் கேரள மாநில மத்திய பகுதி சிறைத்துறை டி.ஐ.ஜி. அஜய குமார் சென்றிருக்கிறார்.

பின்பு ஜெயில் சூப்பிரண்டு ராஜு ஆபிரகாம் அறையில் டி.ஐ.ஜி. அஜய குமார் மற்றும் அவருடன் சென்றிருந்த 3 முக்கிய பிரமுகர்கள் சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக பாமி செம்மனூரிடம் பேசியுள்ளனர். மேலும் சிறையில் பாபி செம்மனூருக்கு முக்கிய பிரமுகர்களுக்கு வழங்கக்கூடிய சலுகைகளும் வழங்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதுகுறித்து சிறைத்துறையின் உயர் அதிகாரி விசாரணை நடத்தினார். அதில் சிறையில் பாபி செம்மனூருக்கு சலுகைகள் வழங்கப்பட்டது உறுதியானது. இதையடுத்து சிறைத்துறை டி.ஐ.ஜி. அஜய குமார், காக்கநாடு சிறை சூப்பிரண்டு ராஜு ஆபிரகாம் ஆகிய இருவரையும் பணி இடைநீக்கம் செய்து மாநில உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.



## ஐதராபாத்தில் ஒரு ஜோடி கிளி ரூ.1000-க்கு விற்பனை: ஒருவர் கைது

ஐதராபாத்தில் ஒரு ஜோடி கிளி ரூ.1000-க்கு விற்பனை செய்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஐதராபாத் உச்ச நீதிமன்றம் அருகே முகமது பரூக் என்பவர் அலெக்ஸாண்ட்ரின் கிளிகளை இரு சக்கர வாகனத்தில் கொண்டு சென்றார். இதனை கவனித்த அதிரடிப்படை அதிகாரிகள் இரு சக்கர வாகனத்தை நிறுத்தி பெட்டிகளை சோதனை செய்தபோது, 110 அலெக்ஸாண்ட்ரின் வகை கிளிகள் இருப்பது தெரியவந்தது.

அதிகாரிகள், கிளிகளை பறிமுதல் செய்து ஆரண்ய பவனில் உள்ள வனத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

கிளிகளை அங்குள்ள பூங்காவுக்கு கொண்டு செல்ல முடிவு செய்தனர்.

முகமது பரூக் கிளிகளை வாங்கி வேறு இடங்களில் விற்பனையில் ஈடுபட்டு வந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஒரு ஜோடி கிளி ரூ.1000 க்கு விற்கப்படுவதாக முகமது பரூக் கூறினார். அவர் மீது வழக்கு பதிவு செய்தனர். கிளிகள் கடத்தலில் ஈடுபடுவோருக்கு 3 முதல் 7 ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுத்தனர்.

## வயநாடு நிலச்சரிவில் காணாமல் போன 32 பேர் உயிரிழந்து விட்டனர்- மாவட்ட பேரிடர் ஆணையம்!

வயநாடு நிலச்சரிவில் காணாமல் போன 32 பேர் உயிரிழந்து விட்டனர் என மாவட்ட பேரிடர் ஆணையம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

வயநாடு மாவட்டம் சூரல்மலை, முண்டக்கை பகுதிகளில் கடந்த ஜூலை மாதம் பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. அதோடு ஊருக்குள் காட்டாற்று வெள்ளம் புகுந்தது. நிலச்சரிவில் சிக்கி 230-க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயம் அடைந்து மீட்கப்பட்டனர். இந்த நிலச்சரிவால் மேற்கண்ட பகுதிகள் இருந்த இடமே தெரியாத அளவுக்கு வீடுகள் மண்ணில் புதைந்தும், உருக்குலைந்தும் போனது.

வயநாடு நிலச்சரிவில் சிக்கி காணாமல் போனவர்களை தேடும் பணி சில நாட்கள் நடந்த பின்னர் கைவிடப்பட்டது. சூரல்மலை, முண்டக்கை ஆகிய பகுதிகளில் ஏற்பட்ட நிலச்சரிவுக்கு பின்னர் காணாமல் போன 32 பேர் இதுவரை கண்டறியப் படவில்லை.

இந்த நிலையில் அவர்களை வயநாடு மாவட்ட பேரிடர் ஆணையம் உயிரிழந்து விட்டதாக அங்கீகரித்து உள்ளது. இதுகுறித்து மாநில அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டு உள்ளது.

மாவட்ட பேரிடர் ஆணையம் அளித்துள்ள இந்த பட்டியலை உள்துறை செயலாளர், கூடுதல் தலைமை செயலாளர், வருவாய்த்துறை செயலாளர் ஆகியோர் சரிபார்த்து, மாநில பேரிடர் ஆணைய முதன்மை செயலாளருக்கு அனுப்புவார்கள். இவர்கள் அங்கீகரித்த அறிக்கையின் அடிப்படையில், மாநில குழு அதை சரிபார்த்து நிலச்சரிவில் காணாமல் போனவர்களை இறந்து போனவர்களாக அறிவிக்க பரிந்துரை செய்யப்படும்.

அதன் பின்னர் கேரள அரசு 32 பேரை இறந்தவர்களாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கும். இந்த உத்தரவின் அடிப்படையில், நிலச்சரிவில் உயிரிழந்தவர்களின் உறவினர்களுக்கு கிடைக்கும் நிவாரணம் உள்ளிட்ட அனைத்து பயன்களும் வழங்கப்படும்.

மேலும் அவரகள் மரணம் பதிவு செய்யப்பட்டு இறப்பு சான்றிதழ் வழங்கப்படும். பின்னர் நிவாரணம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை அரசு தொடங்கும் என்று அரசு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



# உணவின் உன்னதம்



உணவு நம் உயிர் வாழ்க்கைக்கு மிகவும் அத்தியாவசியமாகும். அதிலும் ஆரோக்கியமான வாழ்விற்கு அடித்தளம் உணவுப் பழக்கமே என்றால் அது மிகையாகாது. நமக்குத் தேவையான சத்துக்களைத் தரக்கூடிய உணவினைப் போதுமான அளவு உட்கொள்தல் ஆரோக்கியமான உணவுப் பழக்கமாகும்.

ஆனால் இன்றைய உணவுப் பழக்கங்கள் அவ்வாறு அமைவதில்லை. நேரத்தை மீதப்பபடுத்துவதற்காகவும்- ருசிக்காகவும் துரித உணவு-களை அதிகம் உட்கொள்ளும் பழக்கமே இப்போது அதிகமாகக் காணப்படுகின்றது.இது ஆரோக்கியமற்ற உடல் நலத்திற்கு வழிவகுக்கின்றது.

### தமிழர் உணவு முறை

தமிழர்களின் வாழ்வியல் முறையில் உணவு சார்ந்த கலாசாரம்- உணவையே மருந்தாக பயன்படுத்திய முறை என்பன இருந்துள்ளன. இதற்கான ஆதாரங்களை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு போன்ற சங்ககால இலக்கியங்களில் காணலாம்.

ஒரு மனிதன் தன்னுடைய உடல் கூற்றுக்குத் தகுந்த எந்த உணவை எந்த பருவ காலத்தில் சாப்பிட வேண்டும் என்ற முறைகளெல்லாம் தமிழர்களுடைய வாழ்வியல் முறைகளில் உள்ளது.

வரகு- திணை- குதிரைவால- சாமை இவற்றினையே தமிழர்கள் அதிகமாக உண்டனர். இதனால் வாழ்வும் ஆரோக்கியமாக அமைந்தது.

நோய் நொடி இன்றி ஆரோக்கியமாக வாழ்வதற்கு சிறந்த உணவுப் பழக்கவழக்கம் அவசியமாகும். நாம் உண்ணும் போது அதிகமாக உண்ணக் கூடாது. பாதியளவு உணவு- கால்பகுதி தண்ணீர்- அடுத்த கால்பகுதி காற்றின் வருகைக்கு ஏற்றபடி வயிற்றில் இடம் விட்டு சாப்பிடுதல் சிறந்தது.

மூன்று வேளை உணவுகளையும் உரிய அளவில் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். கீரை வகைகள்- காய்கறிகள்- தானியங்கள் முதலானவற்றை உண்ண வேண்டும். துரித உணவுகளை உண்பதைத் தவிர்ப்பது நன்று.

உணவு உட்கொண்ட உடனே தூங்குதல் கூடாது. அதிக கொழுப்புச் சத்துள்ள உணவுகளைத் தவிர்த்து விற்றமின் உள்ள பொருட்களை உட்கொள்ளுதல் வேண்டும்.

இன்றைய உணவுப் பழக்கமானது உடல் நலத்திற்குத் தீங்கு விளைவிப்பதாகவே உள்ளது. இன்றைய சமூகத்தினர் பீட்சா- பர்கர்-பரோட்டா போன்ற துரித உணவுகளையே அதிகம் விரும்பி உண்கின்றனர்.

இத்தகைய துரித உணவுகளில் எம்.எஸ்.ஜி என்ற இரசாயன உப்பு கலக்கப்படுகிறது. இதனால் அதிகமாக மற்றும் அடிக்கடி உணவு உண்ண வேண்டும் என்ற உணர்வு தூண்டப்படுகின்றது.

இதன் காரணமாக உடல் எடை கூடுவது மட்டுமல்லாது பல பக்க விளைவுகளும் ஏற்படுகின்றன. சிறுவயது மரணம்-மாரடைப்பு- நீரிழிவு- உயர் ரத்த அழுத்தம் போன்ற பாரிய நோய்களும் ஏற்படுகின்றன.

### உணவே மருந்து

“மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்- என வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார்.

அதாவது நாம் தினமும் உணவு உண்ணும் போது எது நமது ஆரோக்கியத்திற்கு சிறந்தது எனத் தெரிவு செய்து உண்ணும் போது அதுவே சிறந்த மருந்தாக அமைந்து விடும்.





நோய் நொடி இன்றி ஆரோக்கியமாக வாழ்வதற்கு சிறந்த உணவுப் பழக்க வழக்கம் அவசியமாகும். நாம் உண்ணும் போது அதிகமாக உண்ணக் கூடாது. பாதி யளவு உணவு- கால்பகுதி தண்ணீர்- அடுத்த கால்பகுதி காற்றின் வருகைக்கு ஏற்றபடி வயிற்றில் இடம் விட்டு சாப்பிடுதல் சிறந்தது. மூன்று வேளை உணவுகளையும் உரிய அளவில் எடுத்துக்கொள்ளுதல் வேண்டும். கீரை வகைகள்- காய்கறிகள்- தானியங்கள் முதலான வற்றை உண்ண வேண்டும். துரித உணவு களை உண்பதைத் தவிர்ப்பது நன்று.

நல்ல உணவுகளை எடுத்துக் கொள்ளும் போது நம்மை நோய்கள் அண்டாது. காய்கறிகள்- தானியங்களை உணவாக உட்கொள்ளும் போது அவற்றில் உள்ள ஊட்டச்சத்து உடலில் சேரும் போது நோய்ப் பாதுகாப்பை உணவுகளே ஏற்படுத்துகின்றன.


தினமும் ஐந்து விதமான பழங்களையும்சில காய்கறிகளையும் உணவில் உட்கொண்டால் உடல் ஆரோக்கியம் சிறப்பாக அமையும்.

இன்றைய உணவுப் பழக்கமானது நாகரிக வளர்ச்சி- சமூக வளர்ச்ச-வாழ்க்கைத்தரம் முதலானவற்றால் மாறியுள்ளது. இதனால் நமது ஆரோக்கியமானது பெரிதும் பாதிப்படைகின்றது.

அதிக நோய்கள் ஏற்படவும்- மரணம் ஏற்படவும் நம் முறையற்ற உணவுப் பழக்கவழக்கமே காரண-மாகிறது.

எனவே ஊட்டச் சத்துள்ள உணவுகளை உண்டு. சிறந்த உணவு பழக்கத்தையும் கடைப்பிடித்து வாழ்ந்தால் ஆரோக்கியமான வாழ்வை வாழ முடியும்.





# குவாட் அமைப்பு கூட்டம்: அமெரிக்க வெளியுறவு மந்திரியுடன் எஸ்.ஜெய்சங்கர் ஆலோசனை!

வாஷின்டனில் இடம்பெற்ற குவாட் அமைப்புக் கூட்டத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரியாக பதவியேற்ற மார்கோ ரூபியோக்கு இந்திய வெளியுறவுத்துறை மந்திரி எஸ்.ஜெய்சங்கர் ஆலோசனை வழக்கியதாக தகவல்கள் வெளியாகின.

அமெரிக்க அதிபர் டிரம்பின் பதவியேற்பு விழாவில் இந்தியா சார்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் கலந்து கொண்டார்.

இந்த நிலையில் அமெரிக்கா, இந்தியா, ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளை உள்ளடக்கிய குவாட் அமைப்பின் கூட்டம் அமெரிக்காவில் நடந்தது. இதில் அந்தந்த நாடுகளின் வெளியுறவுத்துறை மந்திரிகள் கலந்து கொண்டனர்.

அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி யாக பதவியேற்ற மார்கோ ரூபியோவுடன் இந்திய வெளியுறவுத்துறை மந்திரி எஸ்.ஜெய்சங்கர் ஒரு மணி நேரத்துக்கு மேல் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதேபோல் மார்கோ ரூபியோவை ஆஸ்திரேலியா மந்திரி பென்னி வோங், ஜப்பான் மந்திரி இவாயா தகேஷி ஆகியோரும் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

இதுகுறித்து எஸ்.ஜெய்சங்கர் தனது எக்ஸ் வலைதள பக்கத்தில் கூறும் போது, வாஷிங்டனில் பயனுள்ள குவாட் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டேன். பெரியதாக சிந்திப்பது, நிகழ்ச்சி நிரலை ஆழப்படுத்துவது மற்றும் எங்கள் ஒத்துழைப்பை தீவிரப்படுத்துவதன் முக்கியத்துவத்தை ஒப்புக் கொண்டோம்.

இன்றைய சந்திப்பு, நிச்சயமற்ற மற்றும் நிலையற்ற உலகில், குவாட் உலக நன்மைக்கான ஒரு சக்தியாகத் தொடரும் என்பதற்கான தெளிவான செய்தியை அனுப்புகிறது என்றார்.




# கொலம்பியாவில் இராணுவ அவசர நிலை அறிவிப்பு

வெனிசுலா எல்லையோர மாகாணங்களில் இராணுவ அவசர நிலையை அறிவித்து கொலம்பியா அதிபர் குஸ்டாவோ பெட்ரோ உத்தரவிட்டுள்ளார். தென் அமெரிக்க நாடான வெனிசுலாவின் கக்கடா மாகாணத்தில் பல்வேறு கிளர்ச்சி குழுக்கள் செயல்படுகின்றன. அவர்கள் அண்டை நாடான கொலம்பியாவின் எல்லைக்குள் நுழைந்து அடிக்கடி தாக்குதல் நடத்துகின்றனர்.

குறிப்பாக அப்பாவி மக்கள் மற்றும் பொதுச்சொத்துகளை குறிவைத்து அவர்கள் தாக்குதல் நடத்துவதால் அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். இதனை தடுக்க எல்லை பகுதியில் கொலம்பியா இராணுவ வீரர்களை நிலைநிறுத்தி உள்ளது.

அந்தவகையில் கொலம்பியா எல்லை வழியாக கிளர்ச்சியாளர்கள் நுழைந்தனர். அப்போது அவர்களை தடுக்க முயன்ற இராணுவ வீரர்களுக்கும், கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே மோதல் நடைபெற்றது. இந்த மோதலில் இருதரப்பிலும் இதுவரை 80-க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு உள்ளனர். எனவே அங்கு பதற்றமான சூழல் நிலவுகிறது. இதனால் நிலைமையை சமாளிக்கவே கொலம்பியா அதிபர் அவசர நிலை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குடியுரிமை விவகாரத்தில் டிரம்ப் உத்தரவுக்கு தடை கோரி 22 மாநிலங்கள் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல்!



ஜனநாயகக் கட்சிகள் தலைமை வகிக்கும் 22 மாநிலங்கள் மற்றும் அடிப்படை உரிமைகள் குழுக்கள் அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்த பிறப்புரிமை குடியுரிமையை திரும்பப் பெறும் முயற்சியை எதிர்த்து நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளன.

கடந்த திங்கட்கிழமை பதவியேற்றதையடுத்து , குடியரசு கட்சியை சேர்ந்த டிரம்ப், அமெரிகாவில் பிறந்த குழந்தைகளின் தாய் அல்லது தந்தை அமெரிக்க குடிமகனாகவோ அல்லது சட்டப்பூர்வ நிரந்தர குடியிருப்பாளராகவோ இல்லாவிட்டால் அவர்களின் குடியுரிமையை அங்கீகரிக்க மறுக்குமாறு அமெரிக்க நிறுவனங்களுக்கு உத்தரவிட்டார்.

கொலம்பியா மாவட்டம் மற்றும் சான் பிரான்சிஸ்கோ நகரத்துடன் இணைந்து 22 ஜனநாயக கட்சி தலைமை வகிக்கும் மாநிலங்கள், டிரம்ப் அமெரிக்க அரசியலமைப்பை மீறியதாக பாஸ்டன் மற்றும் சியாட்டிலில் உள்ள நீதிமன்றங்களில் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளன.

இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராக பதவியேற்ற டிரம்ப் குடியிரிமை குறித்த நிர்வாக உத்தரவில் கையெழுத்திட்ட சில மணி நேரங்களில் அவரது நிர்வாகத்திற்கு எதிராக நீதிமன்ற போராட்டங்களை எதிர்கொள்ள துவங்கியுள்ளது. டிரம்ப்-இன் உத்தரவுகள் அமலுக்கு வரும் பட்சத்தில், அமெரிக்காவில் ஆண்டுதோறும் பிறக்கும் 1.5 இலட்சத்திற்கும் அதிக குழந்தைகளுக்கு முதல் முறையாக குடியுரிமை பெறும் உரிமை மறுக்கப்படும் என்று அட்டார்னி ஜெனரல் ஆண்ட்ரியா ஜாய் கேம்பெல் அலுவலகம் தெரிவித்துள்ளது. இது குறித்து வெள்ளி மாளிகை தரப்பில் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

# துருக்கியில் ஹோட்டலில் ஏற்பட்ட தீ விபத்து: பலி எண்ணிக்கை 76-ஆக உயர்வு!



நேற்றைய தினம் துருக்கியில் ஹோட்டலில் ஏற்பட்ட தீ விபத்தில் பலி எண்ணிக்கை மேலும் 76-ஆக அதிகரித்துள்ளதாக சர்வதேச ஊடகங்களில் செய்திகள் பரவி வருகின்றன.

துருக்கியின் வடமேற் கில் உள்ள போலு மாகாணம் கிப்ரிசிக் நகரில் கர்தால்கயா ஸ்கை ஓட்டலில் தீ விபத்து ஏற்பட்டது. 12 தளங்களைக் கொண்ட அந்த ஓட்டல் முழு வதும் தீ பரவி கொளுந்துவிட்டு எரிந்தது.

தீ விபத்தில் சிக்கி 66 பேர் பலியானார்கள். 50-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

அவர்களை மீட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மேலும் சிலர் உயிரிழந்தனர்.

இதனால் பலியானவர்களின் எண்ணிக்கை 76-ஆக உயர்ந்தது. அவர்களில் 45 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், மற்றவர்களை அடையாளம் காணும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறுமி கடந்த சில தினங்களாகக் காய்ச்சலால் பாதிக் கப்பட்டிருந்தார்.

அவ்வேளை சிறுமியை அவரது பெற்றோர் கொக்குவில் பகுதியில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றுக்குக் கொண்டு சென்றபோது, அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, கடந்த திங்கட்கிழமை சிறுமிக்குக் கடும் சுகவீனம் ஏற்பட்ட நிலையில், பெற்றோர் புங்குடு தீவு வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

அவ்வேளை, சிறுமி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்து அறிக்கையிட்டுள்ளனர்.

அதனையடுத்து, சிறுமியின் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையில் நிமோனியா காய்ச்சல் காரணமாகவே சிறுமி உயிரிழந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

## தூக்கில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்வி கற்கும் 18 வயதுடைய மாணவனே தனது வீட்டில் தூக்கில் தொங்கியவாறு நேற்று செவ்வாய்க்கி ழமை இரவு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யோகேந்திரன் முகுந்தன் என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குடும்பத்தினருடனான முரண்பாடு காரணமாக மேற்படி மாணவன் தூக்கில் தொங்கி உயிரை மாய்த்திருக்கலாம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைகாகக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் கூறியதாவது:-

"சிறைச்சாலைகளில் தற்போது குறைந்தளவு அரசியல் கைதிகளே உள்ளனர் என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எம்மிடம் தெரிவித்துள்ளார்கள். எனவே, அவர்களை இந்த அரசு விடுதலை செய்ய எமக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி தமிழ் மக்கள் முன்னெடுக்கும் போராட்டங்களுக்கு எமது கட்சியின் முழுமையான ஆதரவைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அரசியல் கைதிகளை மிக விரைவில் விடுதலை செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்." - என்றார்

## வெள்ளவத்தையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடத்தப்பட்டுள்ளார். கடத்தப்பட்ட பெண்ணிடம் இருந்து 31 ஆயிரத்து 500 ரூபா மற்றும் பிற பெறுமதியான பொருட்களைக் கொள்ளை அடித்துக் கொண்டு வெலிக்கடையில் பெண்ணைக் கடத்தல்காரர்கள் கைவிட்டுச் சென்றுள்ளனர். இந்த கடத்தல் சம்பவம் தொடர்பான காணொளி சமூக ஊடகங்களில் பரவி வருகின்றது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் முன்னர் பொலிஸ் பிரிவில் கடமையாற்றி சேவையிலிருந்து பணி இடைநிறுத்தப்பட்டவர் எனத் தெரியவந்துள்ளது. இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய ஏனைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## மகிந்தவே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"போரை முடிவுக்குக் கொண்டு வந்து இலங்கை மக்களுக்கும் நாட்டுக்கும் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தவரே மஹிந்த ராஜபக்ஷ. அவரே என்றைக்கும் நாட்டு மக்களின் தலைவராக இருக்கின்றார். அவர் முன்னாள் ஜனாதிபதி, முன்னாள் பிரதமர் என்றாலும் நாட்டு மக்களின் தலைவர் அவரே.

மஹிந்த ராஜபக்ஷ தோற்கடிக்கப் படவில்லை. அவர் மக்களின் மனதில் என்றைக்கும் தலைவராக இருக்கின்றார்.

அவருக்கான பாதுகாப்பைக் குறைப்பதன் ஊடாகவோ அல்லது அவரை முன்னாள் ஜனாதிபதிக்கான உத்தியோக பூர்வ இல்லத்தில் இருந்து விரட்டுவதன் மூலமாகவோ மக்களின் மனதில் இருந்து அவரை நீக்க முடியாது என்பதை அநுர அரசு புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் தலைவரான மஹிந்த ராஜபக்ஷவை மக்களே பாதுகாப்பார்கள்." - என்றார்.

## மாணவி கடத்தப்பட்ட சம்பவம்:

# பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி பணியில் இருந்து இடைநிறுத்தம்

கண்டி, கம்பளை, தவுலகல பகுதியில் பாடசாலை மாணவி ஒருவர் வானில் கடத்திச் செல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்கத் தவறிய குற்றச்சாட்டில் தவுலகல பொலிஸ் நிலையப் பதில் பொறுப்பதிகாரி பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார். அத்துடன் இரண்டு பொலிஸ் அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவ தினத்தன்று கடமையில் இருந்த மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்தின் பிரதான பெண் பொலிஸ் பரிசோதகர், கடுகண்ணாவை பொலிஸ் நிலையத்துக்கும், குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாகச் செயற்பட்ட உப பொலிஸ் பரிசோதகர், வேலம்பொடை பொலிஸ் நிலையத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மாணவி கடத்தப்பட்ட தினம், சம்பவம் இடம்பெற்ற பகுதி ஊடாகப் பயணித்த கம்பளை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தவுலகல பொலிஸாருக்கு அறிவித்த போதும், கடமையில் இருந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை எனக் குற்றச்சாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மருதானை பொலிஸ் நிலையச் சிறைக்கூண்டில் தவறான முடிவெடுத்து பெண் ஒருவர் உயிர்மாய்ப்பு

கொழும்பு, மருதானை பொலிஸ் நிலையத்தின் சிறைக்கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் இன்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது. வவுனியா பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் நேற்று செவ்வாய்க்கிழமை மருதானை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தின் சிறைக்கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்துள்ளார். இதன்போது, இந்தப் பெண் இன்று அதிகாலை 4 மணியளவில் பொலிஸ் நிலையத்தின் சிறைக்கூண்டினுள் உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவில் கன மழையால் 65 பேர் பாதிப்பு

வவுனியா, ஜன 22

வவுனியாவில் கடந்த சில நாட்களாகப் பெய்து வரும் கன மழையால் 20 குடும்பங்களைச் சேர்ந்த 65 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன், தமது இருப்பிடங்களில் இருந்தும் வெளியேறியுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

வங்காள விரிகுடாவில் ஏற்பட்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக வவுனியாவில் தொடர்ச்சியாக கன மழை பெய்து வருகின்றது. இதனால் வவுனியா மாவட்டம் தழுவிய ரீதியில் இடர் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன் பல வீடுகள் முற்றாக வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

அந்தவகையில், வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள நெளுக்குளம் பகுதியில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 4 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவில் பீடியாபாம் பகுதியில் 19 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேரும் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் இடைத்தங்கல் முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், மத்திய நீர்ப்பாசனத் திணைக்களத்தின் கீழ் உள்ள பாவற்குளம், இராசேந்திரங்குளம், ஈரப்பெரியகுளம், முகத்தான்குளம், மருதமடுக்குளம் மற்றும் கல்மடு அணைக்கட்டு என்பன நீர் வரத்து அதிகரித்தமையால் தொடர்ந்தும் வான் பாய்ந்து வருகின்றன.

இதனால் இதன் கீழ்ப் பகுதிகளில் உள்ள மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

# சிறப்பாக இடம்பெற்ற வவுனியா மாவட்ட சமாதானப் பேரவையின் பொங்கல் விழா



வவுனியா மாவட்ட சமாதானப் பேரவையின் பொங்கல் விழா மூன்றுமுறிப்பு பகுதியில் அமைந்துள்ள முன்பள்ளி வளாகத்தில் சிறப்பான முறையில் இடம்பெற்றது.

இதன்போது, முன்பள்ளி மாணவர்களினால் தமிழர் பாரம்பரியத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பல கலை நிகழ்வுகளும், நடனங்களும் நடைபெற்றன.

இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்ட சர்வ மதப் பேரவையின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆர். விக்கினேஸ்வரன் தலைமையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தப் பொங்கல் நிகழ்வில் கத்தோலிக்க, இந்து, பௌத்தம், இஸ்லாம் மதத் தலைவர்கள் கலந்துகொண்டதுடன், தமிழ், சிங்கள, கிறிஸ்தவ, இஸ்லாமிய முன்பள்ளி மாணவர்களால் அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதன்போது பொங்கல் தினத்தை முன்னிட்டு பரிசுப் பொருட்களும் கலந்து கொண்டவர்களுக்கு வழங்கப்பட்டன. இதில் மதத் தலைவர்கள், வவுனியா மாவட்ட சமாதான பேரவையின் அங்கத்தவர்கள், எப்.ஐ.ஆர்.எம். நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.01.2025 இல் வெளியிடப்பெற்றது.

# மக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் அரச சேவையை உருவாக்க வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து















“ஜனாதிபதியின் எண்ணக்கருவில் முன்னெடுக்கப்படும் ‘கிளீன் ஸ்ரீலங்கா’ வேலைத்திட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு முக்கிய பங்கிருக்கின்றது. அதைச் சிறப்பாகச் செயற்படுத்த வேண்டும். மக்கள் நம்பிக்கை வைக்கும் அரச சேவையை உருவாக்க வேண்டும்.” - என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

“உள்ளூராட்சி மன்றங்கள் பெற்றுக்கொள்ளும் வருமானங்களைத் தமது பிரதேச மக்களின் வாழ்வாதார உள்ளிட்ட ஏனைய மேம்பாடுகளுக்குச் செலவு செய்யவேண்டும். அதைவிடுத்து அதனை நிரந்தர வைப்பிலிட்டு சேர்த்து வைத்துக்கொண்டிருக்கக் கூடாது.” - என்றும் அவர் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை நகர சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பருத்தித்துறை பொது மரக்கறிச் சந்தை இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன், உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் 45 மில்லியன் ரூபா செலவில் இந்தச் சந்தை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகர சபையின் செயலர் திருமதி தாரணி கஜரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், “ஒதுக்கப்படும் நிதியை உரிய காலத்தில் செலவு செய்து முடிப்பதென்பது எமக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கின்றது. ஆனால், இந்தக் கட்டடத்தை மிக நேர்த்தியாக உரிய காலத்தில் நிறைவேற்றிய ஒப்பந்தக்காரருக்கு நன்றி.” - என்று தெரிவித்தார். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட ஆளுநர் நா.வேதநாயகன் தனது உரையில்,

“பௌதீக வளங்களின் முன்னேற்றம் என்பது அபிவிருத்திக்கு இன்றியமையாதது. அதேபோன்று தனித்து பௌதீக வளங்களின் முன்னேற்றம் மாத்திரமும் அபிவிருத்தியாகிவிடாது. எங்களின் சேவையை மேம்படுத்தும்போதுதான் அபிவிருத்தி முழுமையடையும். எனவே, மக்களுக்குத் தரமான, அன்பான, விரைவான சேவையை வழங்க முன்வரவேண்டும்.

தற்போது எமக்குள்ள உள்ளூராட்சி உதவி ஆணையாளர், நகர சபையின் செயலர் ஆகியோர் இளையவர்களாக இருக்கின்றார்கள். அவர்கள் உத்வேகத்துடனும் துடிப்புடனும் செயலாற்றுகின்றனர். இந்தப் பொதுச் சந்தைக்குரிய காணியைக் கொள்வனவு செய்து கட்டடம் அமைத்து இன்று மக்களுக்குக் கையளிக்கின்ற சபையின் செயலரையும் பணியாளர்களையும் பாராட்டுகின்றேன். இதேபோன்று திறம்பட பணியாற்றுவதுடன் எதிர்காலத்தில் இந்தப் பொதுச் சந்தையை பராமரிப்பதிலும்தான் இதன் வெற்றி தங்கியிருக்கின்றது.” - என்றார்.

இந்த நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலர் சி.சத்தியசீலன், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன், பருத்தித்துறை நகர சபையின் முன்னாள் நகர பிதா யோ.இருதயராஜா, பருத்தித்துறை பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் அ.சா.அரியகுமார், பருத்தித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க மற்றும் வர்த்தகர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.